# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC.558/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-16/PW- 5 | Village: |
| Name : சுதாகர் | Age :42 |
| Father's/Husband's Name : செல்வராஜ் | Taluk : |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 13.11.2024**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமைக் காவலர் திருமதி. டென்னிசாமேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது அழகிரிநாதன்பேட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் பால் வியாபாரம் செய்து வருகிறேன், சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் அழகிரிநாதன்பேட்டையில் மதியம் சுமார் 12.30 மணியளவில் கூட்டமாக இருந்தது. என்னவென்று கேட்டபோது ஆட்டோ கவிழ்ந்து விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். பிறகு போலீஸ் வந்து விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். ( **மேற்படி**

**கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை என்ன நடந்தது என்று கேட்டார்கள் நான் தெரியாது என்று சொல்லிவிட்டேன்.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 05.04.2015 ம் தேதி இரவு 7.30 மணியளவில் நானும் எங்கள் ஊரை சேர்ந்த ஆனந்தராஜ் என்பவரும் சம்பவ இடத்திற்கு அருகே நின்றுகொண்டிருந்போது அங்கு வந்த திருப்பனந்தாள் போலிசார் குற்ற எண் 103/2015 வழக்கு தொடர்பாக விசாரித்து வரைபடம் வரைந்து மகசர் தயார் செய்தார்கள் என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் போட்டேன் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி ஆஜரில் இருந்தார். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**